6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய கடைசிப்பகுதி மாநிலத்தை விட்டு மாநிலத்திற்கு மது கடத்தப்பட்டால், அவற்றை அதிகாரிகள் கண்டுபிடிக்கிறார்கள், அது ஸ்மகிளிங் செய்யப்பட்டதா, செய்யப்படவில்லையா, அல்லது அந்த லைசென்சு பெறுவது சம்பந்தமான பணம் 'அமௌண்ட்' சம்பந்தமாக அதிகாரிகள் தவறு இழைக்கிறார்கள் என்று சொல்லி சில நடவடிக்கைகள் எடுக்கின்றபோது, நீதிமன்றத் திற்குச் சென்று அதில் தங்கள் பக்கம் நியாயம் இருக்கிறது என்று வாதாடுகின்ற உரிமை மனுதாரர்களுக்கும் அல்லது அப்பொருள் யாரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதோ அவர்களுக்கும் இருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு, அதிகாரிகள் சொல்வது இறுதித் தீர்ப்பு என்று இருக்கக்கூடாது. அதிகாரிகள் கடத்தல் செய்கிறார்கள் என்று தவறான முடிவை எடுத்துவிட்டால்கூட, அதில் நியாயம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அதுமட்டுமல்ல, அதில் ஏதாவது ஒரு சின்ன தவறு, தப்பு நடந்து விட்டால் கூட அதில் முடிவு எடுக்கும் உரிமை நீதிமன்றத்திற்கு இருக்க வேண்டும். அந்த உரிமை நீதிமன்றத்தில் இருந்து பிரிக்கப்படுவது என்பது சரியல்ல. எனவே இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.